பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 03 வெள்ளிக்கிழமை 17.06.2022 கதிர் 115

## பெருந்தொகைப் பணத்துடன் கொழும்பில் 4 பேர் சிக்கினர்!

கொழும்பில் ஒரு கோடியே 86 லட்சத்து 95 ஆயிரம் ரூபா உள்நாட்டுப் பணத்தையும், 4 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பணத்தையும் வைத்திருந்த நான்கு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புறக்கோட்டை உள்ளிட்ட 3 இடங்களில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப் ☞2



## பொலிஸ் சார்ஜன்ட் சுட்டுத் தற்கொலை

தங்காலையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இன்று தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்கு முன்பாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பொலிஸ் ஊடகப்பிரிவு இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

### கடும் பொருளாதார நெருக்கடியால்

## வவுனியா, திருமலையைச் சேர்ந்த மேலும் 7 பேர் தமிழகத்தில் தஞ்சம்



(மன்னார் நிருபர்)

இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்ந்துள்ள நிலையில் மக்கள் நாட்டிலிருந்து சட்ட விரோதமான முறையில் இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்குச் செல்லும் நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. ☞2

## சர்வகட்சி அரசுதான் நெருக்கடிக்குத் தீர்வு

### மைத்திரி வலியுறுத்து

சர்வகட்சி அரசை உடனடியாக நிறுவினால், தற்போது நிலவும் அனைத்துப் பிரச்சினைகளையும் குறுகிய காலத்தில் தீர்க்க முடியும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள கட்சி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறுகையில்,

நாடு முழுவதும் உள்ள வரிசைகளில் மரணித்தவர்களின் எண்ணிக்கை 11 ஆகப் பதிவாகியுள்ளது. ☞2

## நளினி, ரவிச்சந்திரன் விடுதலை மனுக்கள்

### மன்றால் நிராகரிப்பு



முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் நளினி, ரவிச்சந்திரன் ஆகியோரை விடுதலை செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை சென்னை மேல்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 31 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் நளினி, ரவிச்சந்திரன் ஆகிய இருவரும் தங்களை விடுதலை ☞2

# டிசெம்பர் 31 வரை அருகிலுள்ள பாடசாலைக்குச் செல்லுங்கள்

### ஆசிரியர்களுக்குக் கல்வி அமைச்சு அறிவிப்பு




ஆசிரியர்களைத் தமது வீடுகளுக்கு அருகாமையிலுள்ள பாடசாலைகளுக்குச் சேவைகளில் ஈடுபடுத்தக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. ☞2

## எரிபொருள் வழங்கக்கோரி தொடர்கின்றது போராட்டம்



எரிபொருள்களை வழங்குமாறு கோரி நாடெங்கும் நாளாந்தம் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், நுவரெலியாவில் இன்று அதிகாலையில் இருந்து காத்திருந்த பொதுமக்கள், தமக்கு மண்ணெண்ணெய் வழங்குமாறு கோரி நுவரெலியா - பதுளை வீதியில் உள்ள எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். ☞2

## அறுவடை கிடைத்தால் உணவுப் பஞ்சம் வராது

### விவசாய அமைச்சு கூறுகின்றது



சிறுபோகத்தில் வழமையாகப் பயிரிடப்படும் ஐந்து லட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில், தற்போது 4 லட்சத்து 75 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. அதன் அறுவடை கிடைக்கப் பெற்ற பின்னர், எதிர்காலத்தில் நாட்டில் அரிசித் தட்டுப்பாடு அல்லது உணவு நெருக்கடி ஏற்படாது என விவசாய ☞2

### பொலிஸாரின் கடமைக்கு இடையூறு;

## பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நால்வர் கைது!



பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியின்போது பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறுவிளைவித்தகுற்றச்சாட்டில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ☞2

## குழந்தைக்கு விஷம் வைத்து கொலைசெய்த கொடூரத் தாய்



கணவன் தொழில் தேடிச் சென்ற வேளையில் மனைவி தனது 9 மாதக் குழந்தைக்கு விஷம் வைத்து கொலை செய்துள்ள சம்பவம் மாத்தறை மாவட்டத்தில் மாலிம்படை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த குழந்தை கந்தஹேன, அல்கிரிய, தெலிஜ்ஜவில பகுதியைச் சேர்ந்த வீரதுங்க ஆராச்சிகே பசிது பிரபாத் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவத்தின்போது, வீட்டில் இருந்த குழந்தையும், ☞2

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## குழந்தைக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3 வயது குழந்தையும் அழும் சத்தம் கேட்டு பக்கத்து வீட்டில் வசிக்கும் பாட்டி வந்து பார்த்தபோதுதான் இந்தக் கொடூரம் பற்றிய தகவல் தெரியவந்தது.

இதன்போது, குறித்த குழந்தை ஓட்டோவில் அக்குரஸ்ஸ அரச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும், 9 மாதக் குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டது என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

குழந்தைக்கு விஷம் கலந்த ஏதேனும் கொடுத்துவிட்டு தாய் தப்பிச் சென்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மேலும், தனது மூத்த குழந்தை மீது மிகுந்த அன்பு கொண்டுள்ளார் எனவும், தான் செய்த குற்றத்துக்கு மன்னிப்புக் கிடையாது எனவும் அந்தப் பெண் எழுதி வைத்திருந்த கடிதமொன்றையும் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

22 வயதுடைய குறித்த பெண்ணைக் கைதுசெய்ய பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இறந்த குழந்தையின் மரணம் குறித்து மரண விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

நீதிவானின் உத்தரவின் பேரில் மரணத்துக்கான சரியான காரணத்தைக் கண்டறிய பிரேத பரிசோதனை நடத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## அறுவடை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் பணிப்பாளர் நாயகம் அஜந்த டி சில்வா ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் தற்போதும் சிறுபோகத்தில் பயிரிடப்பட்டுள்ள நிலப்பரப்பை உரியவாறு அடையாளம் கண்டு அவற்றுக்கு உரத்தை வழங்குவதற்கான முறைமை தயாரிக்கப்படவில்லை என ஒன்றிணைந்த விவசாய சங்கத்தின் தலைவர் உபாலி ஏக்கநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், விவசாய அமைச்சர் கூறுகின்றமை போன்று மரவள்ளி பயிரிடல் என்பது இலங்கையில் 1970 முதல் சொல்லப்படுகின்ற கதையாகும் என்று அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்கள் வினவியபோது பதிலளித்த விவசாய அமைச்சின் பணிப்பாளர் நாயகம் அஜந்த டி சில்வா, சிறுபோகத்துக்கு அவசியமான உரத்தை விநியோகிக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் தற்போது நிறைவடைந்துள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

## பேராதனைப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் நேற்று இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியின்போது மைதானத்துக்குள் நுழையும் விளையாட்டு ரசிகர்களின் அனுமதிச் சீட்டுகளை பரிசோதித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மதுபோதையில் வந்த குழுவொன்று பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கடுமையான வார்த்தைகளால் அச்சுறுத்தி ஆவேசமாகவும், கலவரமாகவும் நடந்துகொண்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நிலைமையைக் கட்டுப்படுத்த முற்பட்ட வேளையில் தமது கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் நால்வரும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் 4ஆம் வருடத்தில் கல்வி பயிலும் 3 மாணவர்களும், மாணவி ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் குருநாகல், கொஸ்லந்த மற்றும் கெக்கிராவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் மேலும் கூறினர்.

## வவுனியா......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தநிலையில் இந்தியாவின் தமிழகத்தின் தனுஷ்கோடிக்கு அடுத்த முதலாம் தீடைப் பகுதியில் இன்று இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஒரு ஆண், இரண்டு பெண், 4 குழந்தை உட்பட 7 பேர் தஞ்சம் அடைந்துள்ளனர்.

தீடைப் பகுதியில் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வந்து தஞ்சம் அடைந்துள்ளனர் என்று மரைன் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் விரைந்து சென்ற பொலிஸார் அவர்களை மீட்டு விசாரணைக்காக மண்டபம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

விசாரணை முடிந்த பின்னர் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமில் அவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தஞ்சமடைந்துள்ளவர்கள் வவுனியா மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 2 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் எனத் தெரியவந்துள்ளது.

## பெருந்தொகைப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரால் நேற்று இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

புறக்கோட்டை - டெனெட் சந்தைக் கட்டடத் தொகுதி, மாளிகாவத்தை - நூரானியா சந்தி, கொழும்பு - 10 முதலான இடங்களிலுள்ள 3 தங்க ஆபரண விற்பனை நிலையங்களைச் சோதனைக்கு உட்படுத்தியபோது, குறித்த பணம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள், வெள்ளவத்தை, மருதானை மற்றும் புதுக்கடை முதலான பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எரிபொருள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதற்கு உரிய முறைமையை ஏற்படுத்தக் கோரியும் , வழங்கப்படும் திகதியை உறுதிப்படுத்தக் கோரியும் மண்ணெண்ணெய்க்காக வரிசையில் நின்ற மக்கள் இவ்வாறு வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் எரிபொருள் நிலையப் பணியாளர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தால் நுவரெலியா - ஹற்றன், நுவரெலியா - ராகலை போன்ற பிரதான வீதிகளூடான போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்திருந்த நிலையில் பயணிகள் பெரும் சிரமத்தைச் சந்தித்தனர்.

நீண்ட நேரத்துக்குப் பின்னர் நுவரெலியா பொலிஸ் அத்தியட்சகரின் தொலைபேசி கலந்துரையாடலின் பின்னர் எதிர்வரும் 20ஆம் திகதி மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்று உறுதி வழங்கப்பட்டதன் பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கலைந்து சென்றனர்.

## டிசெம்பர் 31......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிபொருள் பற்றாக்குறையால் எழுந்துள்ள போக்குவரத்துப் பிரச்சினையைத் தவிர்த்துக்கொள்ளும் வகையில் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை செல்லுபடியாகும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மாகாணக் கல்வி அமைச்சின் பணிப்பாளர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இதற்கான அதிகாரத்தை வழங்கும் வகையில், கல்வி அமைச்சின் செயலாளரால் சுற்று நிருபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்களைத் தமது வீடுகளுக்கு அருகாமையிலுள்ள பாடசாலைகளுக்குச் சேவைக்கு அமர்த்தும்போது, மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுமாறும் கல்வி அமைச்சு, அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது.

தேசிய பாடசாலை, சாதாரண பாடசாலை என்ற வேறுபாடின்றி ஆசிரியர்களை இவ்வாறு சேவைக்கு அமர்த்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை ஒன்றில் மேலதிக ஆசிரியர்கள் இருப்பார்களாயின், மேலதிகமாக உள்ள ஆசிரியருக்கு மற்றுமொரு ஆசிரியரை ஈடுசெய்யாது, அவரை அவரது வீட்டுக்கு அருகிலுள்ள பாடசாலையில் கடமைக்கு அமர்த்த முடியும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மாணவர்களுக்குத் தடையின்றி கல்வியை வழங்கும் நோக்கிலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது எனவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## நளினி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யத் தமிழக அரசுக்கு உத்தரவிடக் கோரி சென்னை மேல்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர். தமிழக ஆளுநரின் ஒப்புதலுக்குக் காத்திருக்காமல் ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகளை விடுவிக்கும் தமிழக அரசின் தீர்மானத்தின் அடிப்படையில் தங்களை விடுவிக்க வேண்டும் என்று அந்த மனுவில் கோரியிருந்தனர். இந்த வழக்கு இன்று சென்னை மேல்நீதிமன்ற தலைமை நீதிபதி முனீஸ்வர் நாத் பண்டாரி தலைமையில் ஆராயப்பட்டது.

உயர்நீதிமன்றத்தைப் போல் அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுவிக்கும் அதிகாரம் சென்னை மேல்நீதிமன்றத்துக்கு இல்லை என்று கூறி நளினி, ரவிச்சந்திரன் ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களை தலைமை நீதிபதி நிராகரித்தார்.

## சர்வகட்சி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள மொத்தக் களஞ்சியங்களில் உள்ள நெல், அரிசி, மரக்கறி, பழங்கள் போன்றவற்றைக் கொண்டு செல்வதற்கான வாகனங்களுக்கு டீசல் இல்லை.

இதன்மூலமாக மற்றுமொரு முறையில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. எதிர்காலத்தில் வேறொரு அரசு வந்தால் இந்தப் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா? என அமைச்சர்களும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் கேட்கின்றனர்.

அவர்கள் கூறுவது போன்று எதிர்காலத்தில் வேறொரு அரசு வந்தால் இந்தப் பிரச்சினைகளை குறுகிய காலத்துக்குள் தீர்த்துக்கொள்ள முடியும்.

நிபுணர்கள் மற்றும் இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் நாம் நடத்திய பேச்சுகளில் சர்வகட்சி அரசை அமைத்து 15 பேர் கொண்ட அமைச்சரவையைத் தெரிவு செய்து பொதுத்தேர்தலை நடத்துவதற்கு 6 மாதமோ அல்லது ஒரு வருடமோ காலத்தை நிர்ணயிக்க வேண்டும் என்பது அவர்களின் கருத்தாக இருந்தது.

அந்தக் காலப்பகுதியில் குறித்த நாடுகள் உதவுவதாகவும், அதன் பின்னர் தேர்தலின் மூலம் உருவாகும் புதிய அரசுக்கு உதவ முடியும் எனவும் அந்நாடுகளின் இராஜதந்திரிகள் கூறினர்.

இவ்வாறான கருத்து சர்வதேச ரீதியில் உள்ளது. தற்போதுள்ள அரசுக்குத் தேசிய ரீதியிலான வரவேற்போ அல்லது மக்களின் நம்பிக்கையோ இல்லை என்பதே தற்போதைய பிரதான பிரச்சினையாகும் - என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## குழப்பத்துக்குள் அ.தி.மு.க.!

திரும்பவும் சூடுபிடித்து இருக்கின்றது தமிழ்நாடு அரசியல் களம்.

இப்போது பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.கவுக்குள் மீண்டும் குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது.

பிளவில் பிறப்பாக்கம் கொண்ட கட்சி என்பதனால் அடிக்கடி பிளவுகளை எதிர்கொள்வதே அக்கட்சியின் வழமையான பாணி ஆகிவிட்டது போலும்.

நீண்ட பாரம்பரியம் கொண்ட தி.மு.கவிலிருந்து பிரிந்து – பிளவுபட்டு – தனிக் கட்சியை ஆரம்பித்தார் எம்.ஜி.ஆர்.

அவரது தனி மனிதக் கவர்ச்சியிலேயே அது ஆரம்பத்தில் கட்டி எழுப்பப்பட்டது. அந்தக் கவர்ச்சியை மட்டும் நம்பி இருந்த அந்த கட்சியில், அடுத்த மட்ட தலைவர்களை ஜனநாயக ரீதியில் உருவாக்கி நிலை நிறுத்த எம்.ஜி.ஆர். தவறியமையால் அவரின் திடீர் மறைவையடுத்து கட்சி இரண்டாக பிளந்தது.

அவரது மனைவி ஜானகி அம்மாள் தலைமையில் ஓர்அணியும் எம்.ஜி.ஆரின் துணை போல வாழ்ந்த ஜெயலலிதா தலைமையில் மற்றொரு அணியுமாக சட்டசபைக்கு உள்ளும் வெளியிலும் அ.தி.மு.கவினர் பண்ணிய சண்டப்பிரசண்டம், ஜானகி அம்மையார் ஒரு கட்டத்தில் தானாக ஒதுங்கிக்கொள்ள ஒய்வுக்கு வந்தது.

அதன்பின்னர் ஜெயலலிதா என்ற தனி மனித ஆளுகைக்குள்ளும் – கவர்ச்சிக்குள்ளும் – அ.தி.மு.க. மீண்டும் சிக்கிக்கொண்டது.

அப்போதும், முன்னர் எம்.ஜி.ஆர். இழைத்த தவறு போல கட்சியின் அடுத்த மட்ட தலைவர்களை – இரண்டாவது மட்டத் தலைவர்களை – ஜனநாயக ரீதியில் கட்டி எழுப்பி, நிலைநிறுத்தாமல் ஜெயலலிதாவும் தவறிழைத்தார்.

அதனால் அவரின் திடீர் மறைவையடுத்து அ.தி.மு.க. திரும்பவும் கோஷ்டி மோதலிலும் சிக்கலிலும் மாட்டிக் கொண்டது. ஜெயலலிதாவின் ஆசி பெற்ற வாரிசு போல உள்நுழைந்து, கட்சியைக் கைப்பற்ற முனைந்த சசிகலா, ஜெயலலிதாவுடன் சேர்ந்து இழைத்த சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றவாளியாகி உள்ளே போக கட்சி மேலும் தடுமாற்றத்தில் சிக்கியது.

எனினும் கட்சி மாநில ஆட்சி அதிகாரத்தில் இருந்தமையால், அடுத்த வரிசைத் தலைவர்களாக நின்றோர் தங்களுக்குள் ஓர் இடைக்கால ஏற்பாட்டைச் செய்து – பத்துப் போட்டு, பங்கு பிரித்து, தற்காலிக ஒட்டுதலைப் பேணி நிலைமையைச் சமாளித்தனர்.

நடந்து முடிந்த சட்டசபை தேர்தலுடன் ஆட்சி அதிகாரமும் கை நழுவிப் போக, அதுவரை கட்சி அதிகாரத்தை பகிர்ந்து கொண்டிருந்த எடப்பாடி பழனிச்சாமி (ஈ.பி.எஸ்.) மற்றும் ஓ.பன்னீர்செல்வம் (ஓ.பி.எஸ்.) இடையே முரண்பாடு முற்றிவிட்டது.

இருவரையும் சம நேரத்தில் தலைவர்களாகக் கொண்ட இரட்டைத் தலைமை வேண்டாம், ஒற்றைத் தலைமை அவசியம் என்று எடப்பாடி தரப்பு வற்புறுத்திக் கருத்துக்கூற அது கட்சிக்குள் பெரிய விவகாரமாகி பெரும் களேபரம் ஏற்படும் சூழல் தென்படுகிறது.

ஓ.பி.எஸ்ஸை ஓரம்கட்டி, கட்சியை முழுமையாகத் தன் கட்டுப்பாட்டில் எடுக்க ஈ.பி.எஸ். ஆரம்பித்திருக்கும் முயற்சி மீண்டும் அ.தி.மு.கவை பலவீனம் அடைய வைத்துப் பிளவுபடச் செய்யுமா? இரட்டை இலைச் சின்னம் முடக்கப்படும் நிலைமை மீண்டும் ஏற்படுமா? வெளியில் இருந்தபடி கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்றக் காத்திருக்கும் சசிகலா அம்மையாரின் கைகளில் தேடிப்போய் கட்சி அதிகாரம் விழும் நெருக்கடி ஏற்படுமா? – என்று பலவாறாக ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இந்தச் சிக்கலுக்கு முகம்கொடுத்து வெல்வதில் தான், அந்தக் கட்சி தொடர்ந்தும் தப்பிப் பிழைக்குமா என்ற எதிர்காலம் தங்கியுள்ளது.

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோருக்குப் பின் கவர்ச்சியுள்ள தனிமனித ஆளுமை இல்லாத அக்கட்சி, நல்மேய்ப்பன் இல்லாத மந்தையாகி வருகின்றது.

## அத்தியாவசிய பொருள்களை இறக்குமதி செய்வதற்கு திறந்த கணக்கு முறையின் மூலம் மீண்டும் அனுமதி

### நளின் பெர்னாண்டோ தெரிவிப்பு



திறந்த கணக்கு முறையின் மூலம் அத்தியாவசியப்பொருள்களைஇறக்குமதிசெய்வதற்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் கீழ் 10 அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, உருளைக் கிழங்கு மற்றும் வெங்காயம் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் திறந்த கணக்கு முறையின் ஊடாக இலங்கைக்குக் கொண்டு வரப்படும் என அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர் சங்கத்தின் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

திறந்த கணக்கு பரிவர்த்தனை என்பது பொருள்கள் அனுப்பப்பட்டு பணம் செலுத்தப்படுவதற்கு முன்னர் பொருள்களை விநியோகம் செய்யும் முறையாகும்.

முன்னதாக, திறந்த கணக்குக் முறையின் கீழ் பொருள்களை இறக்குமதி செய்வது நடைமுறையில் இருந்தது.

எனினும் மே 6 ஆம் திகதி முதல், அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது

## சவாகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பெண் தாதிக்குக் கொலை அச்சுறுத்தல்!

சாவகச்சேரி ஆதார மவைத்தியசாலையில்பணியாற்றும்பெண்தாதியஉத்தியோகத்தர் ஒருவர் இரவுக் கடமையிலிருந்த போது தொலைபேசியில் அச்சுறுத்தியமை தொடர்பில் இரு வேறு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நிர்வாகமட்டவிசாரணையைமுன்னெடுத்து அறிக்கை வழங்குமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய அத்தியட்சகருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், சாவகச்சேரி பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் பணியாற்றும் பெண் தாதிய உத்தியோகத்தர் கடந்த புதன்கிழமை நள்ளிரவு கடமையில் ஈடுபட்டிருந்த போது தொலைபேசி ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

அது தொடர்பில் வைத்தியசாலை அத்தியட்சகரிடம் முறைப்பாட்டை வழங்கிய பெண் தாதிய உத்தியோகத்தர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு வழங்கியிருந்தார்.

சம்பவத்தையடுத்து அச்சுறுத்தியவரும் அதேமருத்துவமனையில்வைத்தியசாலையில் கடமையாற்றும் ஆண் தாதிய உத்தியோகத்தர் என பொலிஸ் புலன் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து சம்பவம் தொடர்பில் அறிக்கையளிக்குமாறு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகருக்கு பணித்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கான தொழில் சந்தை திருகோணமலையில்!



(ஹஸ்பர்)

நாட்டில் தற்போது நிலவி வரும் பொருளாதார நெருக்கடிகளை கருத்திற் கொண்டு வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை எதிர்பார்ப்பவர்களுக்கான தொழில் சந்தை திருகோணமலையில் நேற்று இடம்பெற்றது.

வெளிநாட்டுவேலைவாய்ப்புபணியகமும் பிரதேச செயலகங்களும் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

திருகோணமலை நாலாம் கட்டையில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக மாவட்டக் காரியாலயத்தில் குறித்த தொழில் சந்தை இடம்பெற்றது. தம்பலகாமம், கிண்ணியா, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகங்கள் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

இதில் மத்திய கிழக்கு நாடுகள், ரோமானியா போன்ற நாடுகளுக்கான தொழில் வாய்ப்பினை பெறுவதற்கான நேர்முகப் பரீட்சையும் இடம்பெற்றன. சவுதி அரேபியா,கட்டார், குவைட், ஓமான், டுபாய், போன்ற நாடுகளில் தொழில் வாய்ப்பை பெற குறித்த தொழில் சந்தை இடம்பெற்றன. சாரதி, மேசன், தொழிலாளி, பிளம்பர், எலக்ரீசியன், காப்பெண்டர்,வெயிட்டர் மற்றும் ரோமானியா நாட்டுக்கான ஹோட்டல் துறையில் வேலைவாய்ப்புகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதில் வெளிநாட்டு தொழில் முகவர்கள், பணியக அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகளும் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக அதிக ஆர்வம் கொண்டு இத்தொழில் சந்தையில் பங்குபற்றினர்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை காரணமாக வெளிநாட்டு தொழில்வாய்ப்பை பெறுவதற்காக பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதில் வெளிநாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாவட்ட இணைப்பாளர், பணியக பயிற்சி நிலைய முகாமையாளர், முகவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மெக்சிக்கோவில் துப்பாக்கிச் சூடு 4 பேர் பரிதாபகரமாக உயிரிழப்பு

## பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது ஏற்பட்ட சோகம்




மெக்சிக்கோவில் உணவகம் ஒன்றில் மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் உயிரிழந்தனர். மெக்சிக்கோவின் வடக்கு பகுதி எல்லை நகரான Cuidad Juarez பகுதியில் ஏராளமான உணவகங்களும் பொழுதுபோக்கு நகரங்களும் செயல்பட்டு வருகின்றன. இங்குள்ள உணவகம் ஒன்றில் வாடிக்கையாளர்கள் நேற்று மாலை சாப்பிட்டு கொண்டு இருந்தனர். அங்கு பிறந்த நாள் கொண்டாட்டம் களைகட்டி இருந்தது. அப்போது கைத்துப்பாக்கிகளுடன் உணவகத்திற்குள் நுழைந்த 2 பேர் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதல் காட்சி அங்கு பொருத்தப்பட்டு இருந்த கண்காணிப்பு கமராவில் பதிவாகியது.

மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உணவகத்தில் இருந்த 4 பேர் உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த 2 பேருக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. துப்பாக்கி சத்தம் கேட்டதும் சாப்பிட்டு கொண்டு இருந்த பலர் தப்பி ஓடி விட்டமையால் அவர்கள் உயிர் தப்பினர். இது குறித்து தகவல் அறிந்து நிகழ்விடத்திற்கு வந்த பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். வாடிக்கையாளர்களின் பண பைகளை களவாடும் நோக்கில் துப்பாக்கிச் சூடு நடைபெற்று இருப்பது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. கண்காணிப்பு கமரா காட்சிகளின் அடிப்படையில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களை மெக்சிக்கோ பொலிஸார் தேடி வருகின்றனர்.

## கால்கள் நடுங்கும் வீடியோவால் பரபரப்பு

# ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் உடல் நிலை எப்படி உள்ளது?



ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் உடல்நிலை குறித்து சமீபகாலமாக பல விதமான செய்திகள் வருகின்றன. குறிப்பாக உக்ரைன் போருக்கு மத்தியில், அவரது உடல்நிலை தொடர்ந்து மோசமடைந்து வருவதாக ஒரு தகவல் வெளியானது. அவருக்கு புற்றுநோய் இருப்பதாகவும், தனது உடல்நல பிரச்சினைகள் காரணமாக, முன்னாள் கே.ஜி.பி. உளவாளியிடம் ரஷ்யாவின் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்க போகிறார் என்ற தகவலும் பரவியது.

ஒரு ராணுவ கூட்டத்தின்போது புடின் மயங்கி விழும் நிலைக்கு சென்றார் என செய்திகள் பரவின. அதனால், 'பொது இடங்களுக்கு செல்ல வேண்டாம், வீட்டிலேயே ஓய்வு எடுக்க வேண்டும்' என டாக்டர்கள் அறிவுறுத்தியுள்ளனர் எனவும் தகவல் வெளியானது. இருப்பினும், புடினின் உடல்நிலை குறித்து ரஷ்யா தரப்பில் அதிகாரப்பூர்வமான அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை.

இந்நிலையில், புடின் இடம்பெற்று இருக்கும் வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. கிரெம்லினில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்ச்சியில், எடுக்கப்பட்ட வீடியோ ஒன்றில், அதிபர் புடினின் கால்கள் நடுங்குகின்றமையும், அவர் நிற்பதற்கே சிரமப்படுவதும் பதிவாகி உள்ளது. திரைப்பட இயக்குநர் நிகிதா மகாய்லோவுக்கு விருது வழங்கி சிறப்பித்தார் புடின். இந்த விருது வழங்கும் நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

விழா மேடையில் நின்று கொண்டிருக்கும் போது தான் அதிபர் விளாடிமிர் புடினின் கால்கள் நடுங்குவது தெரிகிறது. உடல்நிலை சீராக இல்லை என்பதால், நீண்ட நேரம் வெளியில் செல்வதை தவிர்க்குமாறு அவருக்கு டாக்டர்கள் வலியுறுத்தி உள்ளனர் என கூறப்பட்ட நிலையில் இந்த வீடியோ அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

புடினின் உடல்நிலை குறித்து பல்வேறு வதந்திகள் அதிகமாக வெளியாகி வருகின்றன. அந்த வகையில் சமீபத்தில் அதிபர் புடினின் கழிவை சேகரிக்க தனியாக ஒருவர் நியமிக்கப்பட்டு இருக்கிறார் என கூறப்பட்டது. இவர், புடினின் வெளிநாட்டு சுற்றுப் பயணங்களின்போது, அவரின் சிறுநீர் மற்றும் கழிவை சேகரித்து அங்கிருந்து மாஸ்கோ கொண்டு வந்து அழித்து விடுவார் என கூறப்பட்டது. அந்தக் கழிவுகளை கொண்டு அவரின் உடல்நிலை எப்படி இருக்கிறது என்ற விவரங்களை எதிரிகள் அறிந்து கொள்ளும் வாய்ப்பு இருப்பதால் இவ்வாறு செய்யப்படுவதாக கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் மீண்டும் கொரோனா ஷாங்காயில் ஊரடங்கு அமுல்

சீனாவில் கொரோனா வைரஸ் மீண்டும் பரவி வருகிறது. தலைநகர் பிஜீங், ஷாங்காய் உள்ளிட்ட நகரங்களில் தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டதை அடுத்து அங்கு மக்களுக்கு பரிசோதனை நடத்தப்பட்டது. மேலும் ஊரடங்கு உள்ளிட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. கொரோனா இல்லாத நிலையை உருவாக்க கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. கொரோனா இல்லாத நிலையை உருவாக்க வேண்டும் என்று சீன அரசு கடுமையான விதிகளை நடைமுறைப்படுத்தியது.

ஷாங்காய் நகரில் கொரோனா பாதிப்பு குறைந்ததால் ஊரடங்கு விலக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் ஷாங்காய் நகரில் கொரோனா பாதிப்பு அதிகரித்ததால் மீண்டும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு இருக்கிறது. ஷாங்காயில் உள்ள இரவு நேர கேளிக்கை விடுதியில் 228 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டு இருப்பது கண்டறியப்பட்டது. ஒருவர் மூலம் மற்ற அனைவருக்கும் தொற்று பரவியமை தெரிய வந்தது.

இதனால் அப்பகுதி முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. வணிக வளாகங்கள், கேளிக்கை விடுதி, உணவு விடுதி உள்ளிட்டவை மறு உத்தரவு வரும் வரை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளையும் மூட உத்தரவிடப்பட்டு இருக்கிறது. ஒன்லைன் மூலம் வகுப்புகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கும் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது.

தலைநகர் பிஜீங்கிலும் கொரோனா பாதிப்பு அதிகரித்தபடி இருக்கிறது.



# பாகிஸ்தானின் பிரதமர்களை விட மனைவிகளின் சொத்து மதிப்பு அதிகம்

பாகிஸ்தான் பிரதமர் போஸ் ஷெரீப் மற்றும் அவருக்கு முன் இருந்த இம்ரான் கான் ஆகியோரின் மனைவிகள், அவர்களது கணவர்களை விட பணக்காரர்கள் என்று அதிகாரப்பூர்வ ஆவணங்களை மேற்கோள்காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 2020ம் ஆண்டு ஜூன் 30ம் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டுக்கான சொத்து மதிப்பு விவரங்கள், பாகிஸ்தான் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கைகள்படி, இம்ரான் கான் பாகிஸ்தான் ரூபா மதிப்பில், ரூ.2,00,000 மதிப்புள்ள நான்கு ஆடுகள் வைத்துள்ளார். இம்ரான் கானுக்கு பாகிஸ்தானுக்கு வெளியே வாகனம் அல்லது சொத்து இல்லை, முதலீடு எதுவும் இல்லை.

மேலும் ரூ.6 கோடிக்கும் அதிகமான தொகை வங்கிக் கணக்குகளில் உள்ளது. இது தவிர பாகிஸ்தானின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில், இம்ரானுக்கு 329,196 அமெரிக்க டொலர்களும், 518 பவுண்டுகளும் இருப்பு உள்ளது. இதற்கிடையில், அவரது மனைவி புஷ்ரா பீபியின் நிகர மதிப்பு, பாகிஸ்தான் ரூபா மதிப்பில், ரூ.14.211 கோடி. தற்போதைய பிரதமரின் சொத்து மதிப்பு, பாகிஸ்தான் ரூபா மதிப்பில், ரூ.14.178 கோடி கடனுடன் ரூ.10.421 கோடி மதிப்புள்ள சொத்துக்களை பொஸ் ஷெரீப் வைத்துள்ளார்.

தற்போதைய பிரதமரின் முதல் மனைவியான நுஸ்ரத் பொஸ், ரூ.23.029 கோடி மதிப்புள்ள சொத்துக்களைக் கொண்டுள்ளார் மற்றும் லாகூர் மற்றும் ஹசாரா பிரிவுகளில் தலா 9 விவசாய சொத்துக்கள் மற்றும் ஒரு வீடு ஆகியவற்றைக் கொண்டுள்ளார். அவரது இரண்டாவது மனைவி தெஹ்மினா துரானியின் சொத்து மதிப்பு சுமார் ரூ.57.6 லட்சம். இதற்கிடையில், பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி பிலாவல் பூட்டோ-சர்தாரி அந்நாட்டின் கோடீஸ்வரர்களில் ஒருவர்.

அவருடைய மொத்த சொத்து மதிப்பு, பாகிஸ்தான் ரூபா மதிப்பில், ரூ.160 கோடி. தற்போதைய பிரதமர் பொஸ் ஷெரீப், தனது 23 வயதில் திருமணம் செய்து கொண்டார் மற்றும் அவர்களுக்கு ஐந்து குழந்தைகள் உண்டு. 1993 ஆம் ஆண்டில், தனது 43 வயதில், அவர் இரண்டாவது முறையாக திருமணம் செய்து கொண்டார், அதில் ஒரு மகள் பிறந்தார். ஆனால் அவர் இரண்டாவது மனைவியை விவாகரத்து செய்தார். மீண்டும் அதே ஆண்டில் நிலோபர் கோசாவை மூன்றாவது முறையாக மணந்தார். தொடர்ந்து, 2003 ஆம் ஆண்டில், அவர் தெஹ்மினா துரானை மணந்தார். நான்காவது திருமணம் செய்த பிறகும், 2012ம் ஆண்டு நிற்காமல், இந்த முறை கல்சும் ஹயா என்ற பெண்ணை ஐந்தாவது திருமணம் செய்து கொண்ட ஷாபாஸ் ஷெரீப், இந்த திருமணத்தை அனைவரிடமிருந்தும் மறைத்து வைத்தார். அவர் மூன்று மனைவிகளை விவாகரத்து செய்துள்ளார். இம்ரான் கான் மூன்று திருமணங்களைச் செய்துள்ளார், ஆனால் ஷாபாஸ் ஐந்து திருமணங்களைச் செய்தார். தற்போது, ஷாபாஸ் ஷெரீப் தனது இரண்டு மனைவிகளான நுஸ்ரத் மற்றும் தெஹ்மினா துரானியுடன் வசித்து வருகிறார்.

# நபிகள் பற்றிய பா.ஜ.க. தலைவர்களின் சர்ச்சைக் கருத்து; வெளியுறவுத் துறை மூலம் அமெரிக்கா கடும் கண்டனம்



பா.ஜ.கவின் தேசிய செய்தித் தொடர்பாளராக இருந்த நுபுர் சர்மா கடந்த இரு வாரங்களுக்கு முன்பு தொலைக்காட்சி ஒன்றின் விவாத நிகழ்ச்சியில் பங்கேற்றார். அப்போது அவர் நபிகள் நாயகம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசினார்.

அதேபோல, டெல்லி பா.ஜ.க. நிர்வாகியான அனில் ஜிண்டாலும் நபிகள் குறித்து அவதூறாக டுவிட்டர் பதிவொன்றை வெளியிட்டிருந்தார். இது, இஸ்லாமியர்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

வளைகுடா நாடுகள் இந்தியாவைக் கண்டிக்கும் அளவுக்கு இந்த விவகாரம் சென்றது. பிற இஸ்லாமிய நாடுகளிலும் இந்தியாவுக்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்றன. இதன் தொடர்ச்சியாக, நுபுர் சர்மா பா.ஜ.கவில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார். அனில் ஜிண்டால் கட்சியில் இருந்தே நீக்கப்பட்டார். அவர்கள் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையும் நடைபெற்று வருகிறது.

இந்த விவகாரத்தில் அமெரிக்கா எந்தக் கருத்தையும் வெளியிடாமலிருந்ததால் அமெரிக்காவின் அந்த நிலைப்பாடு அங்கு வசிக்கும் இஸ்லாமியர்களை அதிருப்தி அடையச் செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், அமெரிக்க வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் நேற்று வெளியிட்ட காணொலிப் பதிவில், இந்தியாவில் ஆளுங்கட்சியான பா.ஜ.கவைச் சேர்ந்த சில தலைவர்கள் நபிகள் நாயகம் குறித்து அவதூறான கருத்தை தெரிவித்துள்ளனர்.

இதனை அமெரிக்கா வன்மையாகக் கண்டிக்கிறது. அதே சமயத்தில், அவர்கள் மீது இந்தியா நடவடிக்கை எடுத்திருப்பதை அமெரிக்கா வரவேற்கிறது.

இந்தியாவில் மதச் சுதந்திரம் தொடர்பான மனித உரிமை விவகாரங்கள் குறித்து அந்த நாட்டு அரசாங்கத்தோடு தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகிறோம். மனித உரிமைகள் பாதுகாப்பு விடயத்துக்கு முக்கியத்துவம் அளிக்குமாறு இந்தியாவை ஊக்குவித்து வருகிறோம், என அந்தப் பதிவில் அமெரிக்க வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் தெரிவித்திருக்கிறார்.

## காஷ்மீர் தீவிரவாதிகளுடன் பசுப் பாதுகாவலர்களை ஒப்பிடுவதா?

### நடிகை சாய் பல்லவி மீது பொலிஸ் நிலையத்தில் புகார்



பிரபல தெலுங்கு நடிகரான ராணா டகுபதியின் ஜோடியாக நடிகை சாய் பல்லவி நடித்துள்ள விரத பர்வம் திரைப்படம் வெளியாகும் நிலையில், இந்தப் படத்தின் விளம்பரத்துக்காக யூடியூப் தளம் ஒன்றின் நிகழ்ச்சியில் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் அளித்த பதில் கடும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

நீங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் இடதுசாரி இயக்கங்களால் ஈர்க்கப்பட்டவரா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், தான் நடுநிலையானவர் என்றும் காஷ்மீரில் இந்து பண்டிட்டுகள் கொல்லப்பட்டதற்கும் பசுவைக் கொண்டு சென்றதற்காக இஸ்லாமியரை தாக்கியதற்கும் என்ன வித்தியாசம்? எனவும் இரண்டுமே வன்முறைச் சம்பவங்கள்தான் என்றும் குறிப்பிட்டிருந்தார். இதையடுத்து அவருக்கு ஆதரவாகவும், எதிராகவும் நெட்டிசன்கள் கருத்துத் தெரிவிக்க ஆரம்பித்தனர்.

இந்த விவாகாரம் சர்ச்சையைக் கிளப்பிய நிலையில், தற்போது சாய்பல்லவி மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரி, ஹைதராபாத் சுல்தான் பஜார் பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. விசுவ இந்து பரிசத் இயக்கத்தின் இளைஞர் பிரிவான பஜ்ரங் தள் அமைப்பைச் சேர்ந்த அகில் என்பவர் இந்தப் புகாரை அளித்துள்ளார். பசுப் பாதுகாவலர்களையும் காஷ்மீர் தீவிரவாதிகளையும் ஒப்பிட்டுப் பேசினார் என அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். எனினும் இந்தப் புகாரின் மீது பொலிஸார் இதுவரை வழக்குப்பதிவு செய்யவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## காங்கிரஸ் எம்.பிக்கள் மீது பொலிஸார் தாக்குதல்; மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவிடம் புகார்





டெல்லியில் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய போராட்டத்தின்போது அவர்கள் பொலிஸாரால் கடுமையாக நடத்தப்பட்ட விவகாரம் தொடர்பாக மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவை நேரில் சந்தித்து புகார் அளித்துள்ளனர்.

நஷனல் ஹெரால்ட் வழக்கில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்திக்கு அமுலாக்கத்துறை சம்மன் அனுப்பியதற்கு எதிராக கடந்த 3 நாள்களாக காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மூத்த தலைவர்கள், தொண்டர்கள் என பலரும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். பேரணி நடத்துவதற்கு டெல்லி காவல்துறை மறுப்பு தெரிவித்திருந்த நிலையில் அதனை மீறி பேரணி மற்றும் போராட்டங்களை நடத்தியவர்களை பொலிஸார் தொடர்ச்சியாக கைதுசெய்து வருகின்றனர்.

இந்த நடவடிக்கைகளின்போது காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கடுமையாக பொலிஸாரால் தாக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. ஜோதிமணி, மாணிக்கம் தாகூர், அதி ரஞ்சன் சவுத்ரி, ப.சிதம்பரம் உள்ளிட்ட பலருக்கும் கடுமையான காயங்கள் ஏற்பட்டன என செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த விவகாரம் தொடர்பாக ஏற்கெனவே டெல்லி பொலிஸ் நிலையங்களில் அக்கட்சி சார்பில் புகார்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவை டெல்லியில் நேரில் சந்தித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் அதிரஞ்சன் சவுத்ரி தலைமையில் பத்துக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் புகார் மனுவை அளித்துள்ளனர்.

உரிய அனுமதி இல்லாமல் காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகத்திற்குள் புகுந்த பொலிஸார் நாடாளுமன்ற உறுப்பினர்களை தாக்கினர் என்றும், குறிப்பாக பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வரம்பு மீறி நடந்து கொண்டார்கள் என்றும் அவர்கள் மக்களவை சபாநாயகரிடம் எடுத்துரைத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதற்குப் பின்னர் பத்திரிகையாளர்களை சந்தித்த அதிரஞ்சன் சவுத்ரி, காங்கிரஸ் கட்சியின் தலைமை அலுவலகத்துக்குள் புகுந்து காங்கிரஸ் தலைவர்களை தாக்கிய பொலிஸார், அதனைத் திட்டமிட்டே செய்துள்ளனர் எனவும், மத்திய அரசு பழி வாங்கக்கூடிய வன்முறை அரசியலை செய்வதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## இந்தியர்களின் பணம் சுவிஸ் வங்கிகளில் ஒரே ஆண்டில் 50 சதவீதம் அதிகரிப்பு!






சுவிஸ் வங்கிகளில் இந்தியர்களின் சேமிப்பு தொடர்பான விவரங்களை சுவிட்சர்லாந்து அரசு ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. அந்த வகையில் கடந்த ஆண்டுநிலைவரப்படி தங்கள் வங்கிகளில் இருக்கும் இந்தியர்களின் வைப்புத்தொகை குறித்து தற்போது தகவல் அளித்துள்ளது.

அதன்படி, கடந்த ஆண்டுநிலைவரப்படி ஒட்டுமொத்தமாக 30,500 கோடி ரூபாவுக்கு மேல் இந்தியர்களின் பணம் சுவிஸ் வங்கிகளில் உள்ளது. இது, 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் (20,700 கோடி) சுமார் 10 ஆயிரம் கோடி ரூபா அதிகமாகும்.

அந்தவகையில் ஓர் ஆண்டில் மட்டுமே 50 சதவீத அளவுக்கு இந்தியர்களின் தொகை அதிகரித்து இருக்கிறது. இது கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகமாகும் என்றும் தரவுகள் தெரிவிக்கின்றன. இதைத்தவிர சுவிஸ் வங்கிகளில் இந்தியர்களின் சேமிப்பு கணக்குகளில் வைத்திருக்கும் பணமும் 7 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சுமார் 4,800 கோடியாக உயர்ந்துள்ளதாக சுவிட்சர்லாந்து மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# கல்முனை நூலக சர்ச்சை; மாநகர முதல்வர் விளக்கம்



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர பொது நூலகம் தொடர்பாக ஊடகங்கள் மற்றும் முகநூல்களில் பதிவேற்றம் செய்யப்பட்ட படங்கள் தொடர்பில் கல்முனை மாநகர முதல்வரின் ஊடகப்பிரிவு என அடையாளப்படுத்தப்பட்ட முகநூல் கணக்கினூடாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அந்த விளக்கத்தில் அந்தப் படங்களும்தகவல்களும்முற்றிலும்உண்மைக்குப் புறம்பானவை என கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் அவர்கள் விசனம் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டவை வருமாறு:–

கடந்த 2018/2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நகர திட்டமிடல் அமைச்சின் நிதியொதுக்கீட்டில் இந்நூலகம் முழுமையாகபுனரமைப்புசெய்யப்பட்டது. அப்போது நூலகத்தின் உட்பகுதிகளிலும் புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் அங்குள்ள பெறுமதி வாய்ந்த புத்தகங்கள் சிறிது காலம் அலுமாரிகளிலும் பெட்டிகளிலும் பைகளிலும் வைக்கப்பட்டு, பேணிப் பாதுகாக்கப்பட்டிருந்தன. உள்ளக புனரமைப்பு வேலைகள் துரிதமாக பூர்த்தியடைந்த பின்னர் அப்புத்தகங்கள் வாசககர்களின் பாவனைக்காக வழமைபோல் புத்தக அலுமாரி மற்றும் அதற்கான தட்டுகளில் முறையாகஅடுக்கிவைக்கப்பட்டு, வாசகர்களினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், புனரமைப்பு காலத்தில் எடுக்கப்பட்ட பழைய படங்களை சில விஷமிகள் தற்போது முகநூல்களில் பதிவிட்டு, இப்பொது நூலகம் வாசகர்களின் பயன்பாட்டுக்கு பொருத்தமில்லாமல் பெரும் அவல நிலையில் கிடப்பது போன்று சித்திரித்து மாநகர சபையை விமர்சித்துள்ளனர்.

இது மிகவும் கவலைக்கும் கண்டிக்கத்தக்கதுமான செயற்பாடாகும்.

இது மக்களை குழப்புவதற்காகவும் மாநகர சபை மீது தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்துவதற்காகவும் வேண்டுமென்றே பரப்பப்படுகின்ற பொய்யான, இட்டுக்கட்டப்பட்ட தகவல்கள் என்பதை இந்நூலகத்திற்கு வருகின்ற வாசகர்கள் நன்கறிவார்கள். மேலும், இதன் உண்மை நிலையை கண்டறிய விரும்புவோர் ஒரு தடவை நூலகத்திற்கு விஜயம் செய்து பார்வையிட முடியும்.

மிகவும் பழைமை வாய்ந்த இந் நூலகக் கட்டடம் கல்முனை மாநகர சபையின் முயற்சியினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் அமைச்சராக பதவி வகித்தபோது, அந்த அமைச்சின் நிதியொதுக்கீட்டில், புனரமைப்பு செய்யப்பட்டு, கடந்த சில வருடங்களாக மிகவும் சிறப்பாக இயங்கி வருகின்றது. கல்முனைப் பிராந்தியத்தில் முதன் முறையாக e library சேவையும் இந்நூலகத்திலேயே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது Smart Phone பாவனை அதிகரித்திருப்பதால் புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகளை படிப்பதற்காக வருகின்ற வாசககர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைவடைந்திருக்கின்ற போதிலும், மாணவர்கள் கணிசமானளவு வருகைதந்து நூலகத்தை சிறப்பாக பயன்படுத்தி வருகின்றனர். அவ்வப்போது வெளிவருகின்ற புதிய நூல்களும் மாநகர சபையினால் கொள்வனவு செய்யப்பட்டு, அறிவுத்தேடலுக்குப் பாரிய பங்களிப்பு வழங்கி வருகிறது. நூலகத்தை நாடி வருகின்ற அனைத்து வாசககர்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளும் இங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

கல்முனை பொது நூலகத்தின் தற்போதைய நிலை எந்தளவு சிறப்பாக இருக்கிறது என்பதற்கு இன்று எடுக்கப்பட்ட படங்கள் சாட்சி பகர்கின்றன. – என்று உள்ளது.

# கதிர்காமத்தில் சத்ரு சம்ஹார ஹோமம்





(காரைதீவு நிருபர் சகா)

கதிர்காம வரலாற்றில் முதல் தடவையாக சத்ரு சம்ஹார ஹோமம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜீ ஏற்பாட்டில் இந்த வரலாற்று ரீதியான ஹோமம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இலங்கை, இந்திய மண்ணிலிருந்து பிரபலமான வேதவிற்பன்னர்கள் நடாத்திய இந்த ஆறு மணி நேர வேள்வியில் கதிர்காமம் பஸ்நாயக்க நிலமே நிஷாந்த் குலசேகர கலந்து சிறப்பித்தார்.

அந்த ஹோமம் தொடர்பில் தலைவர் சிவசங்கர் ஜீ கூறியவை வருமாறு:–

திருமூலர் பெருமானின் குருவாணையின் கீழ், போகர் பெருமானின் அருளாசியோடு இதுவரை கதிர்காம மண்ணிலே ஒரு வரலாறு காணாத நிகழ்வான முருக பெருமானின் அபூர்வ சக்திகளை பிரயோகிக்கும் அஸ்திர மந்திரங்களான முந்நூறு மந்திரங்களை கொண்டு பிரயோகிக்கும் சத்ரு சம்ஹார ஹோமம் கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை கதிர்காம மண்ணில் நிறைவேற்று அதிகாரம் கொண்டதசநாயக்க நிலமே முன்னிலையில் உலக நன்மைக்காக நடைபெற்றது.

இலங்கையில் அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பட்டு, போகர் முதல் அகத்தியர் வரை பல சித்தர்களால் உயிரூட்டப்பட்ட புண்ணிய தலத்தில் முருக பெருமானின் ஆறு எழுத்து மந்திரங்களை அட்சரமாக பிரித்து, தொடர்ச்சியாக சரியாக காலை எட்டு மணிக்கு தொடங்கி பகல் இரண்டு மணி வரை ஆறுமணி நேரத்துக்கு மேல் நடைபெற்ற அற்புதமான வேள்வி இது.

முதலில் முழுமையாக ருத்ர, சமக, பூமி சூக்த, ஔசதி சூக்த, கிரண்யா கர்ப்ப சூக்த ஜெபம், குமார உபனித் என பாராயணங்கள் தொடங்கி தொடர்ந்து, சுப்ரம்மண்ய மந்திர பத யாக குண்டத்தில் முருக பெருமானின் மூல மந்திர ஹோமத்தில் தொடங்கி, உயிர் மெய் எழுத்துக்களை கொண்டு உருவாக்கப்பட்ட அட்சரங்களை கொண்ட 300 மந்திரங்களை கொண்ட சத்ரு சம்கார ஹோமம் நடைபெற்றது. அதேவேளை சம காலத்தில் வந்திருந்த அனைத்து முருக பக்தர்களாலும் ருத்ராட்ச ஜெப மாலை கொண்டு லட்ச மூல மந்திர ஜெபம் செய்யப்பட்டதும், முடிவில் சிவவாக்கியர் பெருமானால் சிவன்மலையில் அளிக்கப்பட்ட சத்ரு சம்கார வேலுக்கு பிரமாண்டமான அபிஷேகம், தொடர்ந்து ஸ்கந்த ஹோமம், மாலா மந்திர ஹோமம், காயத்திரி மந்த்ர ஹோமம், நவசக்தி நவவீத ஹோமம், குமார உபனித் ஹோமம், நட்சத்திர அஷ்ட வாக்கிய ஹோமம், தொடர்ந்து நவ கண்ட ஹோமம், ஜெயாதி எனத் தொடர்ந்தது.ஹோம முடிவில் வேலுக்கு சத்ரு சம்ஹார அர்ச்சனை என ஒரு அற்புதமான ஹோம பிரயோகத்தை உருவாக்கி முருக பெருமானின் அருளால் செயற்படுத்தப்பட்டது. முதலில் எவ்வளவு பெரிய சிவாச்சாரியாராக இருந்தாலும் முருக பெருமானின் ஆசி இருந்தால் மட்டுமே இது போன்ற இடத்தில் வரலாற்றிலேயே முதல் தடவையாக ஹோமம் செய்ய முடியும். அதுவும் வைகாசி விசாக நாளில் முருக பெருமானே இன்றும் வாழும் மண்ணில் இது போன்ற வேள்வியை நிகழ்த்த அருள் கிட்டியது.

இந்த மாபெரும் ஹோமத்துக்காக மூன்று மாத காலத்துக்கு மேல் இணுவில் தர்மசாஸ்தா குருகுல மூத்த வேத வாத்தியார் சிவபால சர்மா அவர்கள் பல நூல்களை அவரின் குருநாதரான பெருமதிப்புக்குரிய மகாதேவா வாத்தியார் ஐயா அவர்களிடமும், மயிலாப்பூர் ஸ்ரீனிவாச சாஸ்திரிகளிடமும் கேட்டு மிக சிறப்பான ஒரு கிரியா முறையில் ஒழுங்கமைக்க, ஒரு மாபெரும் வேள்வி சிகரம், சிவாகம சக்கரவத்தி இணுவில் தர்ம சாஸ்தா குருகுல வேத வாத்தியார், சித்தர்களின் குரல் சமஸ்தான பிரதம சிவாச்சாரியர் மஹாதேவ ஸ்ரீ வத்சாங்க குருக்கள் தலைமையேற்று இந்த வேள்வியை நிகழ்த்தினார். – என்றார்.



# இலங்கை நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு தென்கொரிய அரசு ஒத்துழைப்பு வழங்குமாம்

## அதன் தூதுவர் உறுதியளிப்பு

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்காக தமது அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று இலங்கைக்கான தென் கொரிய தூதுவர் ஜீயோன்ங் வூன்ஜின் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற தேர்தலில் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள யூன் சுக் யேலோ மற்றும் அவரது கட்சிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதன் போது வாழ்த்துத் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் தென்கொரியாவிற்கிடையில் 45 ஆண்டு கால இராஜதந்திர தொடர்புகளை நினைவு கூர்ந்த ஜனாதிபதி , தென் கொரிய அரசு இலங்கைக்கு தொடர்ச்சியாக வழங்கி வரும் ஒத்துழைப்புக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் ஜனாதிபதி தூதுவருக்குத் தெளிவுபடுத்தினார்.

இந்த நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு தென் கொரியாவின் ஒத்துழைப்புக்களை எதிர்பார்க்கிறேன் எனவும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

அத்தோடு இலங்கையிலுள்ள இளைஞர்களுக்கு தென் கொரியாவில் வழங்கப்படும் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்குமாறும், தொழிற்துறை முதலீடுகளை ஊக்குவிக்குமாறும் ஜனாதிபதி இதன் போது கேட்டுக் கொண்டார்.

# போஷாக்கு நிலை; ஆய்வு நடக்கிறது

மக்களின் போஷாக்கு நிலை தொடர்பில் ஆய்வு நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருவதாக பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊட்டச்சத்து நிபுணர் வைத்தியகலாநிதி ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியுடன் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியால் மக்களின் போஷாக்கு நிலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி தொடர்பாகத் துல்லியமான தரவுகளைப் பெற்றுக்கொள்வதே இதன் நோக்கமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த டிசெம்பரில் நடத்தப்பட்ட ஆய்வில், நாட்டில் குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் ஊட்டச்சத்து அளவு படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றமை தெரியவந்துள்ளது.

# நெடுங்கேணியில் மரக்கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டது



வவுனியா, நெடுங்கேணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நைனாமடு காட்டுப் பகுதியில் மரக் கடத்தல் முயற்சி வட்டார வனவள அதிகாரிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

நைனாமடுவில் ஒதுக்கப்பட்ட காட்டுப்பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) இரவு மரங்கள் வெட்டி கடத்தப்படுகின்றன என வட்டார வனவள அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய வட்டார வனவள அதிகாரி சமரதுங்க தலைமையிலான உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட தேடுதலில் 6 லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் காட்டுப்பகுதியில் வெட்டப்பட்டு ஏற்றுவதற்கு தயாராக காணப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் வட்டார வனவள அலுவலக அதிகாரிகளின் வருகையையடுத்து அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். இந்நிலையில் மரக் குற்றிகளை வட்டார வனவள அலுவலகத்துக்கு ஏற்றி சென்றுள்ளனர். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை நெடுங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். குறித்த மரக் குற்றிகளையும், டிப்பர் வாகனத்தையும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளோம் என அவர்கள் தெரிவித்தனர்.

# நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் மின்பிறப்பாக்கியின் தொழிற்பாடுகள் நிறுத்தம்


நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் இரண்டாம் மின்பிறப்பாக்கியின் தொழிற்பாடுகள் நாளை (சனிக்கிழமை) முதல் நிறுத்தப்படவுள்ளன.

திருத்தப்பணிகள் காரணமாக அதன் தொழிற்பாடுகள் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு நிறுத்தப்படவுள்ளன.

இதன்காரணமாக 300 மெகாவோட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்பிற்கு கிடைக்காது போகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# செங்கலடியில் ஆர்ப்பாட்டம்





(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு, செங்கலடியில் அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் எரிபொருள், எரிவாயு, உரம் வழங்க கோரியும் விவசாயிகள், மீனவர்கள், கால்நடைவளர்ப்பாளர்கள் மற்றும் ஓட்டோ சாரதிகள் ஒன்றிணைந்து நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் வ.சுரேந்தர் தலைமையில் செங்கலடி கோட்டா கோ கம வளாகத்தில் இருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்ட பேரணியானது ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலகம் வரை சென்றது.

ஆர்ப்பாட்டக்காரர்களின் பேரணியின் பின் ஓட்டோச் சாரதிகளும் தமது ஓட்டோக்களை தள்ளிச்சென்றும் பேரணிக்கு ஆதரவை தெரிவித்தனர்.

செங்கலடி பிரதேச செயலகம் வரை சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள், பிரதே செயலகம் முன் அரசுக்கெதிராகவும் மற்றும் எரிபொருள், உரம் வழங்க கோரியும் கையில் பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த இடத்திற்கு வருகை தந்த செங்கலடி பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் திருமதி என்.பிருந்தன் ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரை தமது அலுவலகத்தில் கலந்துரையாட அழைத்திருந்தார்.

தமது பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியதன் பின் ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை உதவி பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.06.2022இல் வெளியிடப்பெற்றது.